REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம். ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 27உ வியாழன் (12—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 28உ வெள்ளி (13—12—57) [இதழ் 155

சர்க்கார் உத்தியோகம்: தமிழறிவு பெற்றோருக்கே கிடைக்கும்!

சென்னை, டிச. 11—

சென்னை மாநிலத்தில் சர்க்காரின் எந்தத்துறை அலுவலுக்கும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு, கட்டாயமாக, மாநிலத்தின் ஆட்சிமொழியாக ஏற்கப்பட்டிருக்கும் தமிழ் மொழி அறிவு இருக்கவேண்டும் என சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இதற்காக, சர்க்கார் சர்வீஸ் சம்பந்தப்பட்ட விதிகளுக்கு, திருத்தங்களை அறிவித்திருக்கிறது, சர்க்கார்!

திராவிட இயக்கம் சிதைந்து சிதைந்து வளர்ச்சியுறுவானேன்?

உழைப்புக்கு ஏற்ற முழுப் பலன் கிடைக்காததற்குக் காரணமென்ன?

பெரியாரின் ஆற்றல்கள் வேறு காரியங்களில் திரும்பிவிட்டன

அன்றைய பெரியாருக்கும் இன்றைய பெரியாருக்கும் வேறுபாடுகள் காண்கிறோம்

புரட்சி இயந்திரத்தை அமைத்துத் தரும் பொறுப்பை பெரியார் ஏற்கவேண்டும்

தி. க.—தி. மு. க. இணைப்பு நிறைவேறுமா?

நிலைமையை ஆராய்கிறார் அண்ணா

சென்னை—இராயப்பேட்டையில் 10—12—57 மாலை முத்தமிழ் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், திராவிடர் கழகமும்—திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணைவதுபற்றி வெளியான செய்திகுறித்த கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் முறையில், தி. மு. கழகத்தின் நிலையை விளக்கினார்; அதன் விவரம் கீழே தரப்படுகிறது:—

"திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணைவது விரைவில் சாத்தியமே என்று பெரியாரவர்கள் தஞ்சையில் கூறியதாகச் சில பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பது குறித்து என் கருத்தைத் தெரிவிக்கும்படி என்னிடம் ஒரு தோழர் எழுதிக் கேட்டிருக்கிறார்.

"அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால், பெரியார் விருப்பம் அதுவாக இருக்குமானால் நானும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், பெரியார் அப்படிச் சொல்லியிருப்பாரா என்பது உண்மையில் சந்தேகத்துக்குரிய விஷயம்தான். உண்மையில் பெரியார் கருத்து அதுவானால் 'விடுதலை' பத்திரிகையிலே செய்தியாகவோ, தலையங்கமாகவோ பெரியார் கையெழுத்திட்டு வந்திருக்கும். எனவே பெரியார் கூறியது உண்மையானாலும்சரி—உண்மையில்லாவிட்டாலும் சரி எனது கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"அப்படி, பெரியார் அவர்கள் என்னைப் பார்த்து, 'அண்ணாதுரை, வாடா' என்று அழைப்பாரேயானால், நான் என்ன செய்வேன் என்று நீங்கள் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறீர்கள் என்பதையும் நான் அறிவேன்.

"நானும் மற்றத் தோழர்களும் ஏழெட்டு ஆண்டுகளாக ஆரம்பித்து நடத்திவரும் கட்சியின் எதிர்காலத்தைப்பற்றி யோசிக்காமல், அழைத்ததும் அப்படியே போய்விடுவேன் என்று நீங்கள் கருதிவிட வேண்டாம்.

"நாம் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறியபோது என்னென்ன திட்டங்கள் அங்கு இருந்தனவோ, அவைகளுக்குத்தான் நாங்கள் பணிய முடியுமே தவிர, நாங்கள் வெளியேறிய பிறகு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட திட்டங்களுக்கு நாங்கள் உடன்பட மாட்டோம்.

"எங்கள் உடன்பாடே இல்லாமல், எங்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகளை அவர்கள் இன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"நாங்கள் அன்று கண்ட பெரியாருக்கும் இன்றைய பெரியாருக்கும் பெருத்த வித்தியாசமிருக்கின்றது; அவரது ஆற்றலில்—அறிவில்—உழைப்பில் குறைந்திருப்பதாகச் சொல்லவில்லை. அவரது சுற்றுச்சார்பில் இன்றைய தினம் பெரிய வித்தியாசமிருக்கிறது. நாங்கள் அன்று கண்ட பெரியார், அவசரப்பட்டு எந்த நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டார். தனி நபர்களிடத்தில் பகைமையுணர்ச்சி காட்டமாட்டார்.

"தொண்டைமண்டலம் பள்ளியில் இந்தி எதிர்ப்பு நடந்துகொண்டிருந்த நேரத்தில், பிராமண சமுதாயத்துக்கு ஒரு வேண்டுகோள் கொடுத்தார் பெரியார்! மீண்டும் 'அந்த நாளும் வந்திடாதோ' என்று பாடத் தெரிந்தவர்கள் பாடுங்கள்!

"'திராவிடநாடு கிடைத்தால் தங்கள் கதி என்ன ஆகுமோ என்று பார்ப்பனத் தோழர்கள் பயப்பட வேண்டாம்; திராவிட நாட்டில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடு இருக்காது; கட்டை வண்டி இழுக்கவும், குப்பை கூட்டவும், மலம் எடுக்கவும் பார்ப்பனர்களைப் பயன்படுத்துவோம் என்ற பயம் வேண்டாம்; நாகரிகம் வளர வளர அந்த வேலைகளையெல்லாம் இயந்திரமே செய்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும்'—என்று அந்த வேண்டுகோளில் பெரியார் குறிப்பிட்டிருந்தார்.

"அந்தப் பெரியாரை நான் இன்னமும் வழிபட்டுக்கொண்டுதானிருக்கிறேன்; அவர் வழிதான் நடந்துகொண்டிருக்கிறேன். அது மட்டுமல்ல; அந்த நாளைய குருசாமியையும் தோழமைகொள்ள விரும்புகிறேன். அப்பொழுதெல்லாம் தோழர் குருசாமி, 'விடுதலை' பத்திரிகையில், பூணூலை அறுத்துவிட்டுக் கழகத்தில் சேர்ந்த பார்ப்பனத் தோழர்களைப் பாராட்டி எழுதுவார்; அறுக்கப்பட்ட பூணூல் 6, 7 என்று நம்பர் கொடுத்து எழுதுவார்.

"நாம் திராவிடர் கழகத்தை விட்டு வெளியே வந்த பிறகு, அவர்கள் எடுத்த முடிவுகளுக்கெல்லாம், நாமும்உடன்பாடு கொண்டவர்கள்தான் என்று கருதுவது தவறு.

"நான் ஒன்று சொல்லிக்கொள்வேன்; இந்த விஷயத்தில் பெரியாருக்கு ஆழ்ந்த பற்று உண்டு. இந்தியத் துணைக் கண்டத்திலேயே பெரியாருக்கு நிகராக உழைக்கக்கூடிய ஒரு பெருந் தலைவர் வேறு எவருமே இல்லை. மற்றபடி எதிலே எனக்கும் அவருக்கும் மாறுபாடு என்றால், பெரியாரவர்கள், தன்னால் மட்டுமே இந்தக் காரியத்தைச் சாதித்து முடிக்க முடியும்; தன் காலத்திலேயே இதைச் செய்து முடிக்கப்பட வேண்டும்; தனக்குப் பிறகு இதைச் செய்ய யாருமில்லை என்று ஐயப்பட்டு, தனக்குப் பிறகு எல்லாம் நாசமாகிவிடும்" என்பதை உளமார நம்பிக் கொண்டிருப்பவர்.

"முதல் தோசை சுடுவதற்குத்தான் 5 நிமிடம் பிடிக்கும்; முதல் தோசையை சுட்டுவிட்டால், பிறகு இரண்டாவது தோசைசுட 3 நிமிடம் போதும்; அதன் பிறகு ஒவ்வொரு தோசைக்கும் இரண்டொரு நிமிடங்கள் போதும். வீட்டிலுள்ள தாய்மார்களுக்கு இந்த சூட்சமம் புரியும்.

"அதேபோலத்தான், நாட்டில் புரட்சி ஏற்படுவதற்கும்முதல் கட்டம் கொஞ்சம் நாளாகும். அதன் பிறகு, எல்லாம், குறைந்த காலத்திலேயே அடுத்தடுத்து, மிகச் சுலபமாக நடைபெற்றுவிடும்.

"லெனின் உண்டாக்கிய புரட்சிக்குப் பிறகு, ஸ்டாலின் மிகக் குறைந்த காலத்திலேயே புரட்சிகளை நடத்திக் காட்டினார். லெனினையும், ஸ்டாலினையும்விட ஆற்றலும் திறமையும் குறைந்தவரானாலும், குருஷேவால், ஸ்டாலினுக்குப் பிறகும் நாட்டை நடத்திச் செல்ல முடிகிறது.

"இயந்திரம் அமைக்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு அதை இயக்க, நொண்டியாக இருந்தாலும், அவனால் முடியும். இயந்திரத்தை அமைக்க வேண்டிய பொறுப்பு பெரியாருடையது. இயந்திர அமைப்புக்கான திறமையை வேறு காரியங்களில் காட்டுகிறார் பெரியார்.

"நம்முடைய இயக்கம்—திராவிடர் கழகத்தையும் சேர்த்துத்தான் நம்முடைய இயக்கம் என்று சொல்லுகிறேன் — காரியங்களை ஒத்திப்போட்டுக்கொண்டே செல்லக் காரணம் என்ன? நமது இலட்சியம் நிறைவேற இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணமென்ன?

"உண்மையில், பெரியாரவர்களைப்போல் வேறு யாரும் பொதுமக்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள்—நித்தம் நித்தம் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்திக்கிறவர்கள் கிடையாது. பெரியாரைப் போல் வேறு எந்தத் தலைவரும் தன் ஆற்றலைக் காட்டவில்லை. அப்படியிருந்தும் பலன்? 3,000 பேர் சிறை சென்றார்கள்? 30 ஆண்டு உழைப்பின்பலன் இதுவாகத்தானா இருக்க வேண்டும்?

"கோழி வளர்ப்பவனுக்கு. கோழி முட்டையிட்டால்தானே பலன் உண்டு—என்ன பொருள்? கோழி முட்டையிடாவிட்டால் கோழியை வளர்த்து அவனுக்குப் பயன் என்ன? கோழியைப் போல, இயக்கத்தை வளர்த்து என்ன பலன்?

"'மூவாயிரம் பேர் சிறைசென்றிருக்கிறார்கள்' என்று பெரியார் சொன்னால், 'நாங்கள் ஐயாயிரம் பேர் சென்றிருக்கிறோம்' என்று சொல்கிறார் நம் ஆசைத்தம்பி; காங்கிரஸ்காரர்களைக் கேட்டால், 'நாங்கள் 60-ஆயிரம் பேர் சிறை சென்றிருக்கிறோம்' என்பார்கள்; கம்யூனிஸ்டுகளைக் கேட்டால், 'எங்களில் எத்தனைபேர் போனார்கள் என்ற நம்பரே தெரியாது' என்பார்கள்.

"பெரியாரவர்கள் யாரையும் விட இந்த விஷயத்தில் ஒரு துளியும் குறைந்தவரல்ல; ஆனால்,பெரியாரவர்களின் ஆற்றலுக்கேற்ற முழுப் பலன் கிடைக்கவில்லை. கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்ன?

"ஏசுநாதருக்கு—அவருக்குப் பின்னால் அவரது கொள்கைகளைப் பரப்ப 10—12 சீடர்கள் இருந்தார்கள்; முகம்மது நபிக்குப் 2—3 சீடர்கள் இருந்தார்கள்; லெனினுக்கு ஸ்டாலின் இருந்தார்; சன்யாட்சனுக்குப் பிறகு சியாங்கே-ஷேக் இருந்தார்; மாசே-துங்கும் அவரால் காப்பாற்றப்பட்டதாகச் சரித்திரம் சொல்லுகிறது.

"பெரியாருக்கு யார் சீடர்? யாராவது இருந்தால், இருக்கின்ற சீடரும் மாதாமாதம் மாறக் காரணம் என்ன? அண்ணாத்துரையைத் தள்ளிவிடுங்கள்—அண்ணாத்துரை மட்டும்தானா சீடன்? ஜீவானந்தம் சீடனாக இருக்கவில்லையா? எஸ். இராமநாதனும், சாமி சிதம்பரனாரும், சௌந்தரபாண்டியனும் சீடராக இருக்கவில்லையா? ஏன்—காமராசர் கூட, ஒரு காலத்தில் பெரியாரின் சீடராக இருந்ததாக, பெரியாரும்—காமராசரும் சந்தித்து அளவளாவுகிற நேரத்தில் காமராசரே சொல்லுவதாகக் கூறப்படுகிறது.

"இதை, 'Chequered Life' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்; சிதைந்து சிதைந்து வளரும் வளர்ச்சி என்று இதற்குப் பொருள்.

"திராவிட இயக்கம் மேலே முன்னேறிச் செல்லும் போது, பின்னாலும் இழுக்கப்படுகிறது. இதனால் நம் ஆற்றல் சிதைகிறது; அதனால்தான் ஆணவக்காரர்கள் நம்மைப் பார்த்து, 'காட்டுமிராண்டி' என்று கூறுகிற அளவுக்கு இடமளிக்கிறது."

(தொடரும்)

புதிதாக புத்த மதத்தைத் தழுவியோருக்கு புத்த மதம் பற்றிய புத்தகங்கள்

இலவசமாக வழங்குவதற்கு பர்மா பிரதமர் ஏற்பாடு

சாரநாத், டிச. 11—

புதிதாக புத்த மதத்தைத் தழுவியவர்களுக்காக, தமிழ், வங்காளி, மாரத்தி, குஜராத்தி, இந்தி ஆகிய ஐந்து மொழிகளிலும் புத்த மத இலக்கியங்களை வெளியிடப் போவதாக பர்மியப் பிரதமர் யூ-நு, மகாபோதி சங்கத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் புத்தகங்கள், இந்தியா வெங்கணுமுள்ள மகாபோதி சங்கத்தவரால், அம்மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—12—57 வியாழன்

நீதிமன்றத்தை அவமதிப்பதா?

காந்தி கிராம ஆண்டு விழாவில் கலந்துகொள்ளவந்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், விழாவில் கலந்துகொண்டு, காந்தி புகழ் பாடும் அளவுடன் தமது தாயகம் திரும்பவில்லை. வேறு திறப்பு விழாவிலும் மூடுவிழாவிலும் கலந்துகொண்டு, தாம் நாட்டாண்டுவரும் இலட்சணத்தை விளக்கிக்கூறி இருக்கிறார்.

அதுபற்றி எல்லாம் நாம் கவலைகொள்ளவில்லை. அவரிடத்தில் அழகான பேச்சைத் தவிர வேறு காதொடிந்த ஊசி அளவு நற்பயனையும்பொதுமக்கள்எதிர்பார்க்கக்கூடாது என்ற உண்மையை, அவருடைய பத்தாண்டுக்கால ஆட்சி சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது.

இறந்தகால சம்பவங்களைக் கோர்வையாகக் குறிப்பிடுவதில் அவருக்கு அவர்தான் இணை என்பதை நாம் மறுக்கவில்லை. நடைமுறைச் சம்பவங்களை அவர் அடுக்கிக் காட்டுவது போல் பிறரால் காட்ட முடியாது என்பதையும் நாம் முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளுகிறோம். எதிர்காலம் குறித்து அவர் கூறிடும் கற்பனையளவுக்கு,மற்றவர்களுக்குக் கற்பனை ஆற்றல் இருகக முடியாது என்பதையும நாம் ஆமோதிக்கின்றோம்.

வருங்காலத்திற்கும் மாணவர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு குறித்தும், தொழிலாளர்களுக்கும திட்ட வெற்றிக்கும் உள்ள உறவுமுறை பற்றியும், பண்டிதர் பலப்பல போதித்திருக்கிறார். ‘நாட்டின் செல்வம் சிறார்கள’ என ‘மாமா நேரு’ படம் பிடித்திருப்பது பாராட்டத்தக்கது எனபதில் நமக்கு ஆட்சேபணை இல்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முழு வெற்றி பெற்றுவிட்டதாகக் குறிபபிட்டு, அதற்காகப் பண்டிதா தமகுத் தாமே பாராட்டுத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். அதுபோன்றே, இரண்டாவது திட்டத்தின அருமை பெருமைகளைக் குறித்தும் அவர் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

தமது சமதர்மவடிவக் கோட்பாட்டில் இடமபெற்றுள்ள தனியார்துறை, அரசாங்கத்துறை என்ற இரு துறைகளுக்கும் உள்ள ஒற்றுமை-வேறறுமைகளை விளக்கிககாட்டி இருக்கிறார். அதிகம் கூறுவானேன்? தாய்வீட்டுச் சீரும் சிறப்பும் குறிதது உடன்பிறந்தவர்களிடமே பீத்திககொண்ட மேதையின் கதைபோல, பிரதமாக இருந்து பத்தாண்டுக் காலத்தில தாம் சாதித்த சாதனைகளை, ஒன்றுவிடாது மனப்பாடம் பண்ணினதை, தங்கு தடையின்றி ஒபபுவிக்கும் மாணவன் போன்று, தாம பங்குகொண்ட பொதுநிகழ்ச்சிகள் அனைத்திலும் கடகடவென்று பண்டிதா பறைசாற்றி இருககிறார்.

அவ்வாறு தம்மைத் தாமே பாராட்டிப் பேசிக்கொள்வது அவா விருப்பம்; அது அவர் பணியும ஆகும. அப்போக்குக் கொளவதறகு அவருககு உரிமையும இருக்கிறது.

ஆனால், அவர் தம் இயல்புப்படி இரண்டொரு இடங்களில் வாய்த்துடுக்காகப் பேசி இருக்கிறார். இந்தி ஏகாதிபத்தியம் எனக் கூறிவருபவர்களை—வடநாட்டு ஆதிக்கம் எனச் சொல்லி வருகிறவர்களை அவர் கடுமையாகத் தாக்கிப் பேசி இருக்கிறார். இதையும் அவர் பிறவிக்குணம் என நாம் மறந்துவிடலாம்.

ஆனால், நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்துவரும் பெரியார் அவர்களின் வழக்கு பற்றியும், குற்றவாளி எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பெரியார் அவர்களைக் குறித்தும், பண்டித நேரு பேசி இருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும். நீதித்துறைக்கே மாசு கற்பிககும் முறையில் பண்டிதரின் பேச்சு அமைந்திருக்கிறது.

நீதிமன்றததில் விசாரணையில் உள்ள வழக்கு பற்றிப் பேசினாலும், எழுதினாலும், நீதிமன்றததை அவமதித்ததாகும் என்பது சட்டம். அந்தச்சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க, முச்சந்தி முத்தன்மட்டுமே கடமைப்பட்டிருக்கவில்லை; தலைமை அமைச்சராகப் பண்டித நேரு இருந்தாலும், அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து தீரவேண்டிய கட்டாயம் அவருக்கும் உண்டு.

சட்டததிற்கு முன்பு அனைவரும் சமம. பண்டித நேரு இந்தியப் பிரதமர் என்பதற்காகவோ, உலகத்தவரால் புகழப்படுகிறார் என்பதற்காகவோ, ஆசிய ஜோதி என அழைக்கப்படுகிறார் என்பதற்காகவோ, பண்டித நேரு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கு பற்றி வாயில் வந்தபடி எலலாம குளறி வழிந்தால், அது நீதிமனறத்தை அவமதித்ததாகாது என்று சொல்லுவதற்கில்லை. இந்தியப் பிரதமரானாலும, சாதாரண குடிமகன் ஆனாலும், நீதிமனறததில் விசாரணைக் கட்டத்தில இருக்கின்ற வழக்குபற்றி விளககிப பேசுவதும, வழககின தன்மை குறிததுக் கருத்தறிவிப்பதும் நீதிமன்றத்தை அவமதித்து நடந்துகொண்ட குற்றமேயாகும்.

சட்டததிற்கு மதிப்பளித்து நடந்துகொளள வேண்டிய பொறுப்பு சாதாரண குடிமகனுககு இருப்பதைவிட, பண்டித நேரு நிலையில் உள்ளவர்களுககு அதிகம் இருக்கவேண்டும. ஆனால் பண்டிதரோ, அந்த நிலையை, சட்டததுக்கு மதிபபளித்து நடந்துகொளளவேண்டியதற்குப் பயன்படுத்துவதறகுப் பதிலாக, சட்டத்தை உடைத்தெறிவதற்குப் பயன்படுததி இருககிறார்.

அவா வாய்தான் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறதே அல்லாது, அவர் உள்ளம டெல்லி பாதுஷா போக்கில் தான் செயல்பட்டு வருகிறது!

நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்கு பற்றி வாய்திறக்கக்கூடாது என்ற சட்ட உணமையை இந்தியப் பிரதமர் அறியாதவர் என எவரும கூறார். அவர் இப்பொழுது வேண்டுமானால் வழக்கறிஞர் பணியில் ஈடுபடாதவராக இருக்கலாமேயல்லாது, அவர் என்றும வழக்கறிஞர் பணியில ஈடுபடாது இருந்தவரல்ல.

அவர் சட்டம் கற்றவர். நீதிமன்றத்தை அவமதிப்பது எனறால் என்ன என்ற உண்மையை நம்மைவிட, அவர் நன்கு தெரிந்திருப்பவர்.

தமக்குத் தெரியும் என்பதை, முதுகுளத்தூர் வெறிச்செயல் குறிததுத் தாம் குறிப்பிட்ட நேரத்தில், பின்வருமாறு கூறியுள்ளார் :—

“எனக்குத் தெரியாது என்பதுடன், குழபபம்பற்றி நான் அதிகம் சொல்லத் தயாராக இல்லவும் இல்லை. விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருந்துவருகிறது. யார் குற்றவாளிகள், யார் குற்றமற்றவா்கள் என்பதை அவர்கள் (நீதிபதிகள்) தீர்மானிப்பர்.”

முதுகுளததூர் வெறிச்செயல் குறித்து, திண்டுக்கல் கூட்டத்தில இந்தியப் பிரதமர் மேலே குறிபபிட்டுள்ளபடி கூறியுள்ளார்.

மேற்படி உரையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் உண்மை என்ன?

நீதிமன்ற விசாரணையில் இருந்துவரும் வழக்குபற்றிப் பேசுவது சட்டவிரோதமாகும என்ற உண்மையை இந்தியப பிரதமர், தெளிவாகத் தெரிந்திருக்கிறார் என்பதேயாகும.

அப்படி உண்மை தெரிந்த அவர்தான், அதே நீதிமன்ற விசாரணைக் கட்டததில இருந்துவருகின்ற பெரியார் வழககு குறிதது, நீதிமன்றத்தை அவமதிததுப் பேசி இருக்கின்றார். அதுவும் வேண்டுமென்றே, நீதிமன்றத்தை அவமதிக்கிறோம என்ற உண்மையை நனகு தெரிந்தே, இந்தியப் பிரதமர் பண்டித நேரு பேசி இருககின்றார்.

பெரியவர், பெரும் பிழை செய்திருக்கிறார்! நீதிமன்றந்தான, நேர்ந்துள்ள இழுக்கைத் துடைத்துக்கொள்ளும நற்பணியினை மேற்கொள்ள வேண்டும்.

நேபாள மக்கள் உரிமை முழக்கம்

பொதுத்தேர்தல் நடத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

காட்மாண்டு, டிச. 11—

6 திங்களுக்குள் பொதுத்தேர்தல் நடத்தவேண்டும் என்று கோரி மூன்று கட்சிகள் ஒன்றுபட்டு நடத்தும் கிளர்ச்சி வலுவடைந்து வருகிறது. கடந்த மூன்று நாட்களாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அணிவகுத்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்களைக் கலைக்க போலீசை ஏவி, ஆடுமாடுகளைப்போல அடித்து விரட்டவோ, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் செய்யவோ அரசாங்கம் முனையவில்லை. தீயணைக்கும் மோட்டார் வண்டிகள் மூலம் கூட்டத்தினர் மீது தண்ணீர் பாய்ச்சினர். என்றாலும், அவர்களின் உறுதி குலையவில்லை.

பிரதம நீதிமன்றத்தின் முன்பும், நீதிமன்றங்களின் முன்பும் மறியல் நடைபெற்று வருகிறது. மாணவர்கள் கல்லூரி வாயிலில் மறியல் செய்து வருகின்றனர்.

டச்சு குடிமக்கள்

வெளியேற்றப்படுகிறானர்

நியூகினியா தகராறின் காரணமாக இந்தோனேஷியாவில் உள்ள டச்சுக்காரர்களுக்கு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது.

டச்சுக் குடிமக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட டச்சுக் கப்பலிலுள்ள மாலுமிகள் கப்பலிலேயே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அடக்குமுறைக்கு ஆளானோரே அடக்குமுறைக் கருவிகளாகும் விந்தை!

தடுப்புக்காவல் சட்டத்தைக் ‘கருப்புச் சட்டம்’ என்கிறார் கிருபளானி

புதுடில்லி, டிச. 10—

காங்கிரஸ் இதுபோன்ற ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டிருப்பதற்காக நான் மிக வருந்துகிறேன். இதுபோன்ற சட்டங்களை முன்னாட்களில் நாம் ‘கருப்புச் சட்டம்’ என்றும், ‘புறம்பான சட்டங்கள்’ என்றும் கூறிவந்திருக்கிறோம்; ஆனால், வரலாறு திரும்புகிற ஒரு துன்பந்தரும் நிலையையே நாம் மீண்டும் காண்கிறோம். யார் யார் அடக்கி ஒடுக்கப்படுகிறார்களோ அவர்களே பதவிக்கு வந்ததும் அடக்குமுறைக் கருவிகளாகிவிடுவதை நாம் அடிக்கடி காண்கிறோம்”

என்று, மக்கள்சபையில், தடுப்புக்காவல் சட்டத்தைக் கண்டித்துப் பேசுகையில் பி. சோ. தலைவர் ஆச்சாரியா கிருபளானி கூறினார்.

“இந்தச் சட்டம், காலஞ்சென்ற வல்லபாய்படேல் அவர்களால் கொண்டுவரப்பட்டபோது, ஓராண்டுக் காலத்திற்கே கொண்டுவரப்பட்டது; இன்றும் அது நீடித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

“நாம் அயல்நாட்டாருடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தால், அல்லது உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டிருந்தால், நெருக்கடி நிலை இருப்பதாகக் கருதி, இந்தச் சட்டத்தை அனுமதிக்கலாம். ஆனால், இன்று அவை எதுவும் இல்லை”

என்றும் கிருபளானி அவர்கள் கூறியிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர், ‘சென்னையில் திராவிடர் கழகத் தலைவர்மீது கொலைப் பிரசாரக் குற்றத்திற்காக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அதற்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றன; அந்தக் கழகத் தலைவருக்குச் சில சாதிக்காரர்களிடத்திலும, வகுப்பாரிடத்திலும் செல்வாக்கு இருக்கிறது; அந்த ஓட்டுகளைப் பெறுவதில், தென்னாட்டு சர்க்காருக்கு மிகுந்த பிரியம் இருப்பதுதான் அவர்மீது நடவடிக்கை எடுக்காததற்குக் காரணமாகும்’ என்றும கூறினாராம்!

சீனா, ரஷ்யாவை நீக்கிவிட்டு....!

தூரக்கிழக்கு, மத்தியக்கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது

பண்டித நேரு கருத்து

புதுடில்லி, டிச. 10—

“தூரக் கிழக்கில் சீனாவை நீக்கிவிட்டும, மத்தியக்கிழக்கில் ரஷ்யாவை நீக்கிவிட்டும் எந்தப் பிரச்சினைக்கும் பரிகாரம் தேடமுடியாது” என்று, பண்டித நேரு, காமன்வெல்த் பார்லிமெண்டரி மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும்பேசிய அவர், ‘ஆயுதங்களின் நவீனகால வளர்ச்சியும், இதர சர்வதேச விவகாரங்களைப் பொறுத்த அம்சங்களும், இராணுவக் கூட்டுக்களுக்கும நடைமுறையில் சம்பந்தமே இல்லாமல் செய்துவிட்டன’ என்றும் கூறியிருக்கிறார்.

‘போலி சாது’க்கள் பிழைப்பில் மண் விழும்!

சூரத், டிச. 11—

“போலி சாதுக்களை மடங்களிலிருந்தும், விரட்டுவதே சாது சமாஜத்தின் முக்கிய வேலை” என்று, சாது சாமி அதுவானந்த் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் 52 இலட்சம் சாதுக்கள் உள்ளனர் என்று மதிப்பிடப் படுவதை அவர் மறுத்து, 2 அல்லது 3 இலட்சம சாதுக்கள் மட்டுமே இருக்கக் கூடும என்று அவர் கூறியுள்ளார்.

சூதாட்டம், கஞ்சாக்குடி, மதுக்குடி முதலிய தீய பழக்கங்களைச் சாதுக்கள் விட்டுவிட வேண்டும் என்று அவர் அறிவுரை கூறியுள்ளார்.

11-மாதங்களில்!

56இலட்சம் மோட்டார்கள் உற்பத்தி

டெட்ராய்ட்—

அமெரிக்க மோட்டார்தொழில் 1957 முதல் 11 மாதங்களில் 56 இலட்சம் மோட்டார்களை உற்பத்தி செய்துள்ளது என மோட்டார் உற்பத்தியாளர் சங்கம் தெரிவிக்கின்றது.

அக்காலத்தில், 55,83,868 மோட்டார்கள், 10,05,231 டிராக்குகள், 3,624 கோச்சுகள் தயாரிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய செயற்கைச் சந்திரனின் இறுதி கட்டம்?

மாஸ்கோ, டிச. 10—

முதலாவது ரஷ்ய செயற்கைச் சந்திரன் வான வெளியில் வட்டமிடுவது சனவரித் திங்களில் நின்றுவிடுமாம்; இதுவரையில் 2,70,00,000 மைல், அது பிரயாணம் செய்துள்ளதாம்.

முன்னாள் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி!

மொராக்கோ, டிச. 10—

மொராககோவில் மணமாகாத மங்கைகளை அவர்களின் விருப்பமறியாது யாருக்கு வேண்டுமானாலும அவர்களின் பெற்றோர் மணமுடித்துவைக்கும் வழக்கம் இருந்துவந்தது; ஆனால் இனிமேல், தாங்கள் விரும்பாத கணவனை மணக்க வேண்டிய கட்டாயம் மொராக்கோ முஸ்லிம் பெண்களுக்கு இல்லை.

சமீபத்தில் மொராக்கோ அரசாங்கம் அதற்கான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

முஸ்லிம் பெண்ணை மணக்க விரும்பும் முஸ்லிம் இளைஞன், முதலில் பெண்ணின் விருப்பத்தை அறிந்து சம்மதம் பெற வேண்டும். ஆணுக்கு 18 வயது நிரம்பும்வரையிலும, பெண்ணுக்கு 15 வயது வரும வரையிலும திருமணம் நடைபெறுவதற்கு இடமில்லா; தவகையில் அரசாங்கம் புதிய உத்தரவு மூலம் தடைவிதித்துள்ளது.

ஜப்பான் கூட்டுறவுடன் தொழிற்பயிற்சி நிலையம்

ஏற்படுத்த டெல்லியின் திட்டம்

புதுடில்லி, டிச. 11—

இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்ய 15 புதிய திட்டங்களுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளிததுள்ளது என்று தொழில்துறை அமைச்சர் ஷா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் அரசாங்கத்தின் கூட்டுறவோடு இந்தியாவில் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்த மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

லாரி போக்குவரத்து

அரசாங்கம் ஏற்கத் தாமதம்

புதுடில்லி, டிச. 11—

சாமான்கள் போக்குவரத்திற்கான வண்டிகளை அரசாங்கம் ஏற்று நடத்தும் திட்டத்தை மூன்றாவது திட்ட காலத்திற்கு ஒத்திப்போடப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாம்!

சென்னை 19-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்

சி. பி. சிற்றரசு, கோ. செங்குட்டுவன் கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 10—

சென்னை 19-வது வட்ட தி மு. கழகக் கிளையின் சார்பில் 7-12-57 மாலை, ஓட்டேரி பாஷ்யம் செட்டித் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சேலம் சீனிவாசன் இன்னிசைக்குப் பிறகு, தோழர் முருகேசன் தலைமையில் கூட்டம் துவங்கியது. தோழர்கள் லோகநாதன், சுப்பிரமணியம் ஆகியோர் சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பிறகு, சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் இந்தித் திணிப்பைக் கண்டித்து உரையாற்றினர்; அவர் பேசுகையில் வடநாட்டு ஏகாதிபத்தியம் எந்த நோக்கோடு தென்னகத்தில் இந்தியைத் திணிக்க முயல்கிறது என்பதையும், அதை எதிர்க்க இந்த நாட்டிலுள்ள அத்தனைப் பேரும் கட்சி வேற்றுமையின்றி முன்வர வேண்டுமென்பதையும் எடுத்துக்கூறி, தி.மு. கழகத்திற்கு எல்லா மக்களும் ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இறுதியாகத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அரியதொரு கருத்து விளக்கச் சொற்பொழிவாற்றினர்; அவர் பேசுகையில் கழகக் கொள்கைகளை விளக்கியதுடன், பண்டித நேரு, தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என மட்டரகமாகத் திட்டியதை வன்மையாகக் கண்டித்தார்.

அரசியல் சட்ட புத்தகத்தை எரிக்கலாம்; எரிப்பது தவறல்ல என்பதற்கு அரசியல் சட்டத்திலேயே உரிமையளிக்கப்பட்டிருக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், வடநாட்டில் இராவணன் உருவத்தை வடநாட்டுக்காரர்கள், 'இராமலீலா' என்னும் பேரால் எரிக்கிறார்கள்; அந்த எரிப்பு விழாவுக்கு நேருவும் இராசேந்திரபிரசாத்தும் போகிறார்கள்; அவர்களுக்கு வேண்டாதவைகளை அங்கு அவர்கள் எரிக்கும்போது, இங்கு நாம் நமக்கு வேண்டாதவைகளை எரிப்பதில் என்ன தவறு இருக்கமுடியும்?'— என்று கேட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

" காங்கிரஸ்காரர்கள் வெள்ளையரை எதிர்த்துப் போராடுகையில் எத்தனையோ வெளிநாட்டுப் பொருள்களை எரித்தார்கள்; இந்த நாட்டு உடைமைகளையும் எரித்தார்கள்; தந்திக் கம்பியை அறுத்து, தண்டவாளத்தைப் பெயர்த்து நாசவேலை செய்தார்கள். சட்டபுத்தகத்தையும் எரிக்க எண்ணிஞர்கள்; ஆனால் கொளுத்த முடியவில்லை. கொளுத்தக்கூடிய அளவுக்கு அவர்களுக்குத் தைரியம் வரவில்லை-அதனால்தான் கொளுத்தவில்லை. பெரியாருக்குத் தைரியம் இருக்கிறது—கொளுத்தினர்; அவ்வளவுதான். பெரியார் செய்ததைக் குற்றம் என்று சொல்ல இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

" இங்குள்ள மந்திரிகள் மத்திய சர்க்காரின் 'நல்ல அடிமை'கள்! அதனால்தான், தங்கள் எசமானர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளுவதற்காக எதையும் செய்கிறார்கள்.

" அரசியல் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்காரே அதைக் 'கொளுத்துவேன்' என்று கூறினரே, அப்பொழுது இவர்கள் என்ன செய்தார்கள்? அவருக்கே இந்த அரசியல் சட்டம் பிடிக்கவில்லை; 'இப்படிப்பட்ட சட்டங்களை உருவாக்கும்படி நான் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டேன்; அதனால்தான் இதை இந்த முறையிலே நான் உருவாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது' என்று அம்பேத்காரே கூறியிருக்கிறார்."

தோழர் சிற்றரசு அவர்கள் தொடர்ந்து பேசுகையில், இந்தித் திணிப்பைக் கண்டித்தார். இளம் பிள்ளைகள் மூன்று மொழிகள் கற்கவேண்டிய கொடுமை உலகிலே எங்குமே இல்லை என்பதைப் பல ஆதாரங்களுடன் எடுத்து விளக்கினர்.

சிலோன்வாழ் தமிழர் மாநாடு

ஜனவரியில் திருச்சியில் கூட்ட ஏற்பாடு

திருச்சி, டிச. 10—

8—12—57 மாலை 6 மணிக்கு திருச்சி கருணாநிதி பார்க்கில் சிலோன் வாழ் தமிழர் மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

சமீபத்தில் கொழும்பு சென்று வந்த திரு. சி. நடராசன் அவர்கள் தலைமை வகித்து அங்குள்ள தமிழர் நிலை பற்றியும், நமது மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் என்னென்ன விதமாகப் புது நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அங்குள்ளவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்குமென்பது பற்றியும் எடுத்துச் சொன்னர். மற்றும் பலர் தங்கள் கருத்துக்களை அறிவித்தனர்.

பின்னர், சிலோன்வாழ் தமிழர் மாநாட்டை அடுத்த ஜனவரியில் திருச்சியில் நடத்தவும், மாநாட்டின் செயலாளர்களாக டி. கே. தாமரைச்செல்வன், எஸ்.வி. லிங்கம் ஆகியவர்களையும், பொருளாளராக நகரசபை உறுப்பினர் ஆர். நாகசுந்தரம் அவர்களையும் தேர்ந்தெடுப்பது என்றும், மாநாட்டிற்கு சிலோன் முதலமைச்சரையும், சென்னை முதலமைச்சரையும் வரும்படிச் செய்ய செயலாளர்களுக்கு அதிகாரம் கொடுப்பதாகவும், மாநாட்டின் திறப்பாளராகத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களையும், தலைவராக கி. மனோகரன் அவர்களையும் சிபாரிசு செய்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையிலுள்ள பஸ் போக்குவரத்துகள்

கொழும்பு, டிச. 11—

இலங்கையிலுள்ள பஸ் போக்குவரத்துகள் அனைத்தையும் இலங்கை அரசாங்கம் சனவரி முதல் ஏற்று நடத்த முடிவு செய்துள்ளது.

ஆக்கப் பணிகளில் கழகத் தோழர்கள்

சென்னை-நுங்கம்பாக்கத்தில் சாலை அமைத்தனர்

சென்னை-நுங்கம்பாக்கம் சமூக ஊழியர் மன்றச் சார்பில் 1-12-57 காலை 6 மணியளவில் காமராச புரம் (அனெக்ஸர்) இரண்டு வீதிகளுக்கு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் முன்னிலையிலும், 34-வது வட்ட தி. மு. க. செயலாளர் இரா. சம்பந்தன் அவர்கள் தலைமையிலும், சாலை போடப்பட்டது மேற்படி மன்றச் சார்பில் சாலை அமைக்கும் பணியில் வட்டத்திலுள்ள எல்லா தி. மு. க. சார்பு மன்றங்களும் கலந்துகொண்டு ஒத்துழைத்தன.

அமைக்கப்பட்ட சாலையின் அளவு ஒவ்வொரு வீதியும் சுமார் 200 கெஜம் நீளமாகும். கழகத் தோழர்களின் இந்த ஆக்கப் பணி குறித்து இப்பேட்டையில் வாழும் மக்கள் மேற்படி மன்றத்தையும் கழகத் தோழர்களையும் பாராட்டிப் பேசுகின்றனர்.

இந்தச் சாலை அமைப்புக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் மேற்படி மன்றச் சார்பில் செயலாளர் தோழர் எஸ். கே. வீரராகவன் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

தி. மு. க.-சென்னை நகர மாணவர் கிளைக் கூட்டம்

சென்னை —பிராட்வேயிலுள்ள சென்டினரி மண்டபத்தில் 16—11—57 காலை 10 மணிக்கு. தி. மு. க.—சென்னை நகர மாணவர் கிளைக் கூட்டம் நடைபெற்றது; கூட்டத்திற்கு, தோழர் பொன்னுவேலு முன்மொழிய தோழர் ஆறுமுகம் வழிமொழிய தோழர் கே.ஏ. மதியழகன் அவர்கள் தலைமை தாங்கினர்.

தலைவர் முன்னுரைக்குப் பின்னர், தோழர்கள் பில்லப்பன், மதிவாணன், மெய்யப்பன், ஆந்திர நண்பர் சீனிவாசன், மகேஸ்வரன், ஆதிமூலம், பொன்னுவேலு, தில்லை-வில்லாளன் ஆகியோர் அரிய கருத்துரை வழங்கினர்கள்.

பிறகு, (அ) 'இந்தித் திணிப்பை எதிர்த்து மாணவத் தோழர்கள் செய்த வேலைநிறுத்தம் கண்டனத் தீர்மானம், ஊர்வலங்கள் ஆகியவை கண்டு தி. மு. க.—சென்னை நகர மாணவர்கள் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துப் பாராட்டுகிறார்கள்; (ஆ) இந்தியை எப்படியும் திணிக்க வேண்டும் என்னும் அரசினரின் ஏகாதிபத்திய வெறியுணர்ச்சியை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டித்து, அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒருமுகமாக இந்தித் திணிப்பை எதிர்க்கக் கேட்டுக் கொள்கிறது"—என்ற தீர்மானங்களை, தோழர் பில்லப்பன் முன்மொழிய, தோழர் மெய்யப்பன் வழிமொழிந்தார்; தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிதெரிவிக்க, கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கு வந்திருந்தோர் விவரம்:—தோழர்கள் ப. கருப்பையா, க. ஆறுமுகம், சுந்தரமூர்த்தி, கே. பாண்டுரங்கம், ஆதிமூலம், மதிவாணன், சு. ஆறுமுகம், பா. சு. மணியம், சம்சுத்தீன், நஞ்சப்பன், சொக்கலிங்கம், என். வி. என். சோமு, டி. சி. திருவேங்கடம், கே. மாறன், பா. மாணிக்கவாசகம், சு. சண்முகசுந்தரம், க. இராமலிங்கம், செங்குட்டுவன், குரு. மாணிக்கம், து. சி. ப. பார்த்தசாரதி, மா. மதுரை சா. இராசாங்கம், சி. ஆறுமுகம், ந. சி. தேவராசன், உ. பில்லப்பன், கே. ஏ. கிருஷ்ணசாமி, எல். சீனிவாசன், இர. கிருஷ்ணன், நா. பாலகிருஷ்ணன், க. பாலன், க. கணேசன், அண்ணாசாமி, மெய்யப்பன், மாரிமுத்து, வடிவேலு, ஜெயராம், மகேசுவரன், அன்புச்செழியன், உத்திராபதி, நாகசுந்தரம், பொன்னுவேலு, தில்லை-வில்லாளன், கே. ஏ. மதியழகன்.

★

தி. மு. க. சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைப்பு

கூட்டத்தின் ஆரம்பத்தில் தி. மு. க.—சட்டக் கல்லூரி மாணவர் கிளை அமைக்கப்பட்டது; அக் கூட்டத்திற்கு தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமை வகித்தார்; கீழ்க்கண்ட தோழர்கள் நிர்வாகிகளாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர்:—வி. சுந்தரமூர்த்தி; துணைச்செயலாளர்கள்: நாகசுந்தரம், பில்லப்பன்; பொருளாளர்: மாணிக்கவாசகம்; செயற்குழு உறுப்பினர்கள்: ஆறுமுகம், கருப்பையா, நஞ்சப்பன், நேமிநாதன், சுந்தரராஜன், ரங்கராஜன், பாண்டுரங்கன், மணியம், ஆறுமுகம், சீனிவாசன், மலைக்கண்ணு, சேதுராமன், ராமலிங்கம், சுப்பிரமணியம், வேணுகோபால்.

மேலூரில் மு. கருணாநிதி

சிறப்பு மிக்க வரவேற்பு - பொதுக்கூட்டம்

4—12—57-ல், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மேலூரில் என்றுமே கண்டிராத அளவு மக்கள் வெள்ளம் தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்களின் வருகைக்குக் காத்துக்கொண்டு இருந்தது. மாலை 5-30 மணிக்கு, அவர் வந்துசேர்ந்தார்.

அரசினர் ஆசிரியர் ஆதாரப் பள்ளி முன்பிருந்து அலங்கரிக்கப்பட்ட திறந்த காரில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். கொட்டகுடி தி.மு. கழகத் தோழர்கள் முன்னே சிலம்பம் ஆடிச் செல்ல, இரு வர்ணக் கொடி ஏந்திய 300 சைக்கிள்கள் பின்னே செல்ல கம்பீரமாக நின்ற கருணாநிதி அவர்களை சுமந்த கார் மத்தியிலே செல்ல, ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் அணிவகுத்துச் சென்றார்கள்.

ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் வர, மக்கள் மாடிகளிலும் திண்ணைகளிலும் நின்றுகொண்டு ஊர்வலக் கட்சியைக் கண்டுகளித்தனர். ஏழு இடங்களில் கழகக் கொடியை தோழர் கருணாநிதி ஏற்றிவைத்தார்.

இறுதியாக ஊர்வலம் மந்தைத் திடலை அடைந்தது. 7 மணியளவில் பொதுக்கூட்டம் தோழர் ஏ. வேலுச்சாமி தலைமையில் ஆரம்பமாயிற்று; மனுசாந்தி என்னும் எட்டு வயது இளஞ்சிறுமி இனிய தமிழில் வரவேற்புரை ஆற்றியது சிறப்பாக அமைந்தது.

தோழர் எஸ். முத்து கழகக் கொள்கைகளை விளக்கியும், முதுகுளத்தூர் நிலைமை, சட்டசபையில் தி. மு. கழகத் தொண்டு பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்கள்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி பேசஎழுந்ததும்பல கழகங்கள் சார்பிலும், தனி நபர்கள் சார்பிலும் கைத்தறித் துண்டுகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் கருணாநிதி பேசுகையில் ஆதித்திராவிடர்களுக்கு தி. மு. கழகம் செய்துவரும் நன்மை குறித்தும், காங்கிரசாரின் மயக்குப் பிரசாரத்தைக் கண்டித்தும் விளக்கந்தந்தார்.

செயலாளர். ப. தங்கவேலர் நன்றி நவின்றார்.

வலங்கைமானில் ஆசைத்தம்பி

கழகக் கொள்கை விளக்கம்

7—12—57-ல் வலங்கைமான் கடைத்தெருவின் அருகில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தஞ்சை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் ப. நாராயணசாமி தலைமைவகித்தார்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., வலங்கைமான் தோழர் பி. கே. ஈ. அப்துல்லா ஆகியோர் பேசினர்.

வலங்கைமானுக்கு முதல்முறையாக வந்த தி. மு. கழக எம். எல். ஏ. அவர்கள், மாலை 6 மணியளவில் பாலக்கரையிலிருந்து சிலம்பம், உருமி மேளம் முதலிய விளையாட்டுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு நகர தி. மு. கழகம், வரவேற்பு இதழ் வாசித்தளித்தது; மற்றும், ஆண்டாங்கோவில், சித்தன்வாழூர், ஆலங்குடி, பட்டம், சந்திரசேகரபுரம், தில்லையம்பூர், உடையாளூர், ஆண்டித்தோப்பு, மாடாகுடி, லாயம், ஆகிய ஊர்களின் திமுக கிளைகளின் சார்பிலும் வாசன் காபி ஓட்டல் சார்பிலும் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

முதலில் பி. கே. ஈ. அப்துல்லா, முஸ்லிம்கள் தி. மு. கழகத்தில் ஏன் சேருகிறார்கள் என்பது பற்றிப் பேசினர்.

பிறகு தோழர் ஆசைத்தம்பி அவர்கள் சுமார் 2 மணி நேரம் கழகக் கொள்கைகளையும், சட்டசபையில் தி. மு. கழகம் எப்படி பணி செய்கிறது என்பதையும் விளக்கிப் பேசினர்.

துணைச்செயலாளர் ந. சாமிநாதன் நன்றி நவின்றார்.

இந்தியாவில் குடியிருப்பு வசதிகள்

ஒரு புள்ளி விவரம்

சேரி ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; அத்திட்டங்களின்படி 1,10,000 அபிவிருத்தியடைந்த மனைகள் அல்லது குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும்; இத்தொகையில் ரூ. 15 கோடியை இந்திய சர்க்கார் கடன்—உதவித் தொகையாக மாநில சர்க்கார்களுக்கு வழங்குவார்கள்; மீதி ரூ. 5 கோடியை மாநில சர்க்கார்கள் தங்களுடைய ஆதாரங்களிலிருந்து உதவியாக வழங்க வேண்டும்.

சர்க்கார் நிதி உதவியுடன் தொழிலாளர்களுக்குக்குடியிருப்பு வசதி அமைத்துக்கொடுக்கும் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் வரையில் மொத்தம் 63,452 வீடுகள் கட்டப்பட்டுள்ளன; ரூ. 25,33,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

குறைந்த வருமானத் தொகுதியினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு ஆகஸ்டு கடைசி வரையில் மொத்தம் 13,512 வீடுகள் கட்டப்பட்டுள்ளன; 13,168 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் மாநில சர்க்கார்களுக்கு இதுவரையில் ரூ. 18 41,00,000 விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது.

தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம் 1956 ஏப்ரலில் அமுலுக்கு வந்தது; இத்திட்டத்துக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

க்ஷயரோகத்தால் ஏற்படும் விளைவு!

நிமிடத்துக்கு ஒருவர் வீதம் உயிரைப் பலி வாங்குகிற க்ஷயரோகத்தால் இந்தியாவில் பெரும் ஆட்சேதமும், பொருட்சேதமும் ஏற்படுகின்றன; வருடந்தோறும் சுமார் ரூ. 200 கோடி நஷ்டப்படுகிறது; சுமார் 1000 கோடி நபர்-நாட்கள் வேலை நஷ்டம் ஏற்படுகிறது.

ஆண்டிற்கு 5-இலட்சம் பேர் மரணமடைகிறார்கள். 25 இலட்சம் பேர் வியாதியால் துன்புறுகிறார்கள்.

இதுவரை சுமார் 9,70,00,000 பேர் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறார்கள்; சுமார் 3,30,00,000 பேர் ஊசி மருந்து பிரயோகத்தின்மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நேர்காட்டித் தொழிலுக்கு டெல்லியின் உதவி

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச 11—

கெடிகார உற்பத்தித் தொழிலுக்கு உதவியளிக்க மத்திய அரசாங்கம் முன்வரும் என்றும், தெளிவான திட்டங்களைத் தயாரித்து அனுமதி பெறுபவர்களுக்கே அந்த உதவி தரப்படும் என்றும் மக்கள் சபையில் தொழில்துறை அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

சென்னை சர்க்காரிடம் நகரசபை கோரிக்கை

சென்னை, டிச. 11—

1958—59-ம் ஆண்டில், நகரில் சில முக்கிய சீரமைப்புகள் செய்வதற்கு சென்னை அரசாங்கத்திடம் ரூ. 10 இலட்சம் கடனுகக் கேட்க சென்னை நகரசபை முடிவு செய்துள்ளது.

இந்தத் தொகை கிடைக்கப் பெற்றல் தொண்டையார்பேட்டை, பெரம்பூர் பகுதிகளில் சில புதிய சாலைகள் அமைக்கப் படலாம் என்று தெரியவருகிறது.

பிணங்களைப் புதைக்க இலஞ்சமாம்!

மாஸ்கோ, டிச. 11—

மாஸ்கோ மயானத்தில் சவ அடக்கத்திற்கு இடப்பஞ்சம் ஏற்பட்டுளளதாம். இதனுல் 'இலஞ்சம்' கொடுத்து இடம் பெற வேண்டியுள்ளதாம்.

கடந்த 20 ஆண்டுகளில் புதிய மயானத் திடல் எதும் திறக்கப் படவில்லையாம்.

ஐ. நா. பற்றி பண்டிதர்!

புதுடில்லி, டிச. 11—

"எதிர்காலத்தில் மனித வர்க்கத்திற்கு நம்பிக்கை அளிக்கக் கூடியது ஐ. நா. நிறுவனம் ஒன்றே" என்று, பண்டித நேரு காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், 'போர் வெறியும், போர் மிரட்டல்களும் சனநாயக அமைப்புக்கு முரணுனவை' என்று வலியுறுத்திப் பேசியுள்ளார்.

மதுரையில் கட்டபொம்மன் சிலை

மதுரை, டிச. 11—

நேற்று நடைபெற்ற மதுரை நகரசபைக் கூட்டத்தில், நகரில் ஒரு கட்டபொம்மன் சிலை நிறுவுவது என்று முடிவாகியதுடன், மாதிரி சிலை தயாரிக்க 'கமிஷனர், எஞ்சினியர், தலைவர் ஆகியோருக்கு அதிகாரமும வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மதுரையில் ஒரு நகரமண்டபம அமைக்கவும் சீக்கிரமே முடிவு செய்யப்படும் என்றும் நகரசபைத் தலைவர் கூறினர்.

சாதியை ஒழிப்பதற்கு, நகரசபை தன்னிடமுள்ள சொற்ப அதிகாரத்தைக் கொண்டும முயற்சி செய்யும என்றும் அவர் கூறியிருக்கிருர்.

வேலூர் கோட்டைக்குள்ளிருக்கும் கோவில் திறப்பு?

சென்னை சர்க்கார் கோரிக்கைக்கு டெல்லி மறுப்பு

புதுடில்லி, டிச. 11—

"வேலூர் கோட்டைக்குள்ளிருக்கும ஜலகண்டேஸ்வரர் கோவில், பொதுமக்களின் வழிபாட்டிற்காகத் திறந்து விடப்படவேண்டும என்று சென்னை சர்க்கார் சிபாரிசு செய்திருந்தது; வேலூரிலுள்ள இந்துக்களும் மஜஜர் அனுப்பியிருந்தனர்; ஆனல் இதனை மத்திய சர்க்கார ஏற்றுக்கொள்ளவில்லை"

என்று, மாநிலங்கள் சபையில் மந்திரி டாக்டர் கே. ஸ்ரீமாலி, பி. எஸ். இராஜகோபால நாயுடுவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

எதேச்சாதிகார முடிவுக்கு எதிர்ப்பு

மத்திய பட்டு நிறுவனம் வடநாட்டிற்கு மாற்றம்

பெங்களூர், டிச. 11—

மத்திய பட்டு நிறுவனம் இப்போது பெங்களூரில் இருக்கிறது; இதை, பம்பாய் மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

மத்திய அரசாங்கத்தின் இந்த எதேச்சாதிகார முடிவை பலமாகக் கண்டித்து மைசூர் வர்த்தக நிறுவனம் முறையிட்டுள்ளது.

இந்தத் திடீர்மாற்றம் நியாயமானதல்ல என்றும், இதனுல் மைசூர் பட்டுத் தொழில் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும் என்றும் மத்திய அமைச்சர் தேசாய்க்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தித் திணிப்பு கூடாது

சேத் கோவிந்ததாஸ் எச்சரிக்கை

அலகாபாத், டிச. 11—

"அன்னியர்கள் ஆங்கிலத்தைத் திணித்ததுபோல, இந்தி வழங்காத பகுதி மக்கள் மீது இந்தியைத் திணிப்பது கூடாது" என்று, பிரபல இந்தி நாடக ஆசிரியர் கோவிந்ததாஸ் எச்சரித்துள்ளார்.

'இந்தி பேசாத மக்களிடம் இந்தியை வளர்ப்பதில் நியாய புத்தியுடன் நடந்துகொள்ள வேண்டும்' என அவர் மேலும் கூறியுள்ளார்.

ஏற்காட்டிற்கு அண்ணு வருகை

15—12—57 காலை 11 மணியளவில் சேர்வராயன்மலை தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க முதலாண்டு விழா, தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்; அண்ணு அவர்களும் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் அவர்களும் சொற்பொழிவாற்றுவர்.

பி. அண்டு சி. ஆலை தி.மு.க. தேர்தல்நிதிக்குழு உறுப்பினர்களுக்கு:

"14—12—57 காலை 9மணிக்கு திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் (இலட்சுமி டாக்கீஸ் அருகில்) நிதிக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, வரவு-செலவு; குழு நிலைத்தல் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துகொள்ளப்படும்" என்ற குழுச் செயலாளர் கே. சுப்பிரமணி அறிவிக்கிருர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

14—12—57 மாலை 6 மணிக்கு சென்னை—1, எண் 64, சாலை விஞயகர் கோயில் தெரு, என். எஸ். கே. நினைவு மன்றப் பணிமனையில், தோழர் ப. தங்ககுடியரசு தலைமையில் 'ஜனநாயகமும் காட்டுமிராண்டித்தனமும்' என்னும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

பாகிஸ்தானில் மீண்டும் மந்திரிசபை இராஜினமா

தனித் தொகுதி முறைக்கு குடியரசுக் கட்சி எதிர்ப்பு

கராச்சி, டிச. 11—

சுந்திரீகர் தலைமையில் அமைந்து, கடந்த எழு வாரங்களாகப் பதவியிலிருந்து வந்த பாகிஸ்தான் மந்திரிசபை இன்று இராஜினமாச் செய்துள்ளது.

குடியரசுத் தலைவர் மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மீர்ஜா, சுந்திரீகரை மீண்டும் மந்திரிசபையைத் திருத்தி அமைக்குமாறு கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

"தனித் தொகுதி முறையை ஆதரிப்பதாகக் குடியரசுக் கட்சி கூறியதின்பேரில்தான், கூட்டு சர்க்கார் அமைந்தது; ஆனல் குடியரசுக் கட்சியினர், இப்போது ஒப்பந்தத்தை மீறிவிட்டனர்; அதனுலேயே இராஜினமா செய்துவிட்டது சர்க்கார்; என்றுலும், குடியரசுத் தலைவர், சுந்திரீகரையே தொடர்ந்து பதவியிலிருக்குமாறும், புதிய சர்க்கார் அமைக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிருர்; சுந்திரீகரும் இதற்கு ஒப்புக்கொண்டிருக்கிருர்" என சர்க்கார் அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

60 வயதான சுந்திரீகர் பம்பாயில் வணிகத் தொழில் நடத்தியவர்; இப்போது, பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் 15 பேர்கொண்ட முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர். குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் 21 பேர்களும், கிருஷக் சிராமிக் கட்சியினர் நால்வரும், நிஜாமி இஸ்லாமி கட்சியினர் மூவரும் சுந்திரீகர் மந்திரிசபைக்கு ஆதரவு தந்துவந்தனர்.

மந்திரிசபை அமைந்து ஒரு மாதத்திற்குப்பிறகு குடியரசுக கட்சி, முஸ்லிம் லீகின் தனித் தொகுதித திட்டத்திற்கு ஆதரவு தர மறுத்துவிட்டு, கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் கருத்தறிய சமிட்டி ஒன்று நியமியது; அதன் பேரில், கட்சியின் தலைவரான டாக்டர் கான்சாகிப், இதுபற்றி ஒரு முடிவெடுக்க அதிகாரமளிக்கப்பட்டார்.

அவர், தனித் தொகுதி முறையை குடியரசுக் கட்சி ஆதரிக்க முடியாது என்றும், கூட்டுத் தொகுதி முறையே வேண்டும என்றும் கூறிவிட்டதின்பேரிலேயே மந்திரிசபை இராஜினமாச் செய்துவிட்டது.

பம்பாய் ரேயான் நூற்பு ஆலைக்கு அமெரிக்க புது உதவி

பம்பாயிலுள்ள தனியார் துறையைச் சேர்ந்த ரேயான் நூற்பு ஆலை ஒன்றுக்கு அமெரிக்க ஏற்றுமதி—இறக்குமதி பாங்கி சமார் ரூ. 70 இலட்சம் கடனுதவியளிக்க முன்வந்துள்ளதபகத் தெரிய வருகிறது.

கடலில் கள்ளத் தங்கம்

கோழிக்கோடு, டிச. 11—

ரூ. 5,61,000 மதிப்புள்ள 5,610 தோலா எடையுள்ள கள்ளத் தங்கம இங்குள்ள கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதுவரையில் இங்கு, ரூ. 23 இலட்சம் மதிப்புள்ள தங்கம கைப்பற்றப்பட்டுளளதாம்.

****

சட்டக் கல்லூரி தி. மு. க.—மாணவர் கிளை துவக்க விழா

13—12—57 மாலை 6-மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

தலைவர்: வை. சுந்தரமூர்த்தி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன்

டி. கே. பொன்னுவேலு

****

தியாகனூருக்கு அண்ணு வருகை

ஊராட்சி மன்றம் வரவேற்கும்

14—12—57 மாலை 4 மணிக்கு தியாகனூர் ஊராட்சி மன்றக் கட்டிடம், வானெலித் திறப்பு விழா, ஊராட்சி மன்றத் தலைவர் திரு. டி. பி. ராமராஜ் தலைமையில் நடைபெறும்; துணைத் தலைவர் கோ நல்லதம்பி உடையார் கொடியேற்றிவைப்பார்; அண்ணு அவர்கள் ஊராட்சி மன்றக் கட்டிடத்தைத் திறந்துவைப்பார்; தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. வானெலியைத் திறந்து வைப்பார்; திரு. குப்புசாமி காந்தியார் படத்தைத் திறந்துவைப்பார்; தோழர்கள் சி நடராசன் எம்.எல்.ஏ., டி. இருசப்பன் எம்.எல்.ஏ. சொற்பொழிவாற்றுவர்.

விழாவின்போது, அண்ணு அவர்களுக்கு ஊராட்சி மன்றத்தாரால் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்படும்.

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

செயற்குழுக் கூட்ட அழைப்பு

"15—12—57 பிற்பகல் 2 மணிக்கு சென்னை—இராயபுரம், 'அறிவக'த்தில் நடைபெறவிருக்கும் சென்னை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டத்திற்கு, செயற்குழு உறுப்பினரனைவரும் தவருமல் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வமயம் ஆய்வுக்கு வரும் பொருள்கள்:—

1. திராவிடர் திருநாள்
2. மாவட்ட வளர்ச்சி"

என, சென்னை மாவட்ட தி.மு.க. துணைச்செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிருர்.

சென்னை மாணவர் மன்ற வேண்டுகோள்

மாணவர் மன்றச் சார்பில் 15—11—57 காலை 5 மணிக்கு, சென்னை கடற்கரைப் புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்று அன்று மாலையே திரும்பி வந்துவிடக்கூடிய வகையில் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைக் கண்டு பாராட்டி வாழ்த்துக்கூற ஓர் இன்பப் பயணம ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"மாணவர் மன்றத்தினருடன் பல பள்ளியினரும், கழகத்தினரும் நூல்வின்பத்தரை செலவில் கலந்துகொளகின்றனர். பிற கழகங்களும், பொதுமக்களும் கலந்துகொணடு இவ்வரிய வாய்ப்பினைப பயன்படுத்திககொள்ள வேண்டுகிறோம்.

கலந்துகொள்ள விழைவோர், ஆயனூர் முத்தையமுதலி தெரு. 34-ம் எணணுள்ள மன்றக் கிளை நிலையதில் நேரில் தெரிவிக்க வேண்டுகிறோம" என, சென்னை மாணவர் மன்றத்தினர் கேட்டுககொளகின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

அன்பில் (லால்குடி வட்டம்):
மந்தை வெளியில்
13—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: அன்பில்-இராமையா
பேசுவோர்:
கே. ஆர். பி. மணிமொழியன்
அன்பில்-தருமலிங்கம்
,, இரா. கோபால்

★

தலைவாசல் (சேலம்):
மாரியம்மன் கோவில் முன்புள்ள
கே. வி. கே. சாமி திடலில்
14—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: எஸ். ஆர். மாணிக்கம்
பேசுவோர்:
அண்ணு
எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
சி. நடராசன் எம்.எல்.ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

★

காட்டுக்கோட்டை:
தி. மு. க. முதலாண்டு விழா
கே. வி. கே. சாமி திடலில்
14—12—57 இரவு 9 மணிக்கு
தலைவர்: பொ. கோவிந்தசாமி
பேசுவோர்:
அண்ணு
எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
சி. நடராசன் எம்.எல்.ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

★

சென்னை—பெரியமெட்டு:
பேரக்ஸ் ரோடில்
(மெடிகல் ஸ்டோர் அருகில்)
14—12—57 மாலை 6½மணிக்கு
தலைவர்: ஆ. வே. பழனிசாமி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
அ. குப்புசாமி

★

மேலானி:
சந்தைத் திடலில்
14—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: மே. உ. அ. அஜீஸ்
பேசுவோர்:
ஏ வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
ஜி. என். இராசு
எஸ். அட்பாவு

★

வைடிப்பாக்கம்:
தி. மு. க. துவக்க விழா
குடிதாங்கி மந்தைவெளி திடலில்
14—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: ச. இராசகோபாலன்
பேசுவோர்:
ஏ. கே. வில்வம்
அருண்மொழி
எம். செல்வராஜ் எம்.எல்.ஏ.
இரா. சாம்பசிவம்
கே. எம். வேலு எம்.சி.

★

ஆழ்வார் தோப்பு (நெல்லை):
14—11—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: எல். ஜி. நாயகம்
பேசுவோர்:
பி. இராமசாமி
ஆ. அண்ணமலை
டி. சேவந்தி

சென்னை—தூலை கே.வி. கே. சாமி நினைவுப் படிப்பக செயற்குழு உறுப்பினர்களுக்கு:

14—12—57 இரவு 7 மணியளவில் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகச் செயற்குழுக் கூட்டம் சூளை, கலியாணமேஸ்திரி தோட்டம், எண் 149 இல்லத்தில் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு, பொதுக் கூட்டம், திராவிடர் திருநாள் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.